**ஜே.ஆர். ஜயவர்தன வரலாற்று ஆராய்ச்சி, சுவடிக்கூடங்கள் மற்றும் நூலக நிலையம் - 2010**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1:1. அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட தகவல்களுக்கும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, ஜே.ஆர். ஜயவர்த்தன வரலாற்று ஆராய்ச்சி, சுவடிக்கூடங்கள் மற்றும் நூலக நிலையம் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய கணக்கேடுகளைப் பேணியிருந்தது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர ஜே.ஆர். ஜயவர்த்தன வரலாற்று ஆராய்ச்சி, சுவடிக்கூடங்கள் மற்றும் நூலக நிலையத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாட்டு நடவவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1:2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1:2:1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

நிலையத்தின் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகள் தனித்தனியாக இனங்காணப்படாது ஒரு கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் காணிகளின் பெறுமதிக்கும் பெறுமானத்தேய்விற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**1:2:2. நிறுவனத்தின் பெயர்**

1988 இன் 77 ஆம் இலக்க ஜே.ஆர். ஜயவர்த்தன நிலைய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தின் பெயர் ''ஜே.ஆர் ஜயவர்தன வரலாற்று ஆராய்ச்சி, சுவடிக் கூடங்கள் மற்றும் நூலக நிலையம்'' ஆக இருந்த போதிலும் இறுதி நிதிக்கூற்றுக்களில் ''ஜே.ஆர்.ஜயவர்தன நிலையம்'' ஆகவும்

நிறுவனம் பயன்படுத்துகின்ற கடிதத் தலைப்பில் ''ஜயவர்தன கலாச்சார நிலையம்'' ஆகவும் பயன்படுத்தப்படுகின்றது.

### 1:2:3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் முதலிவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 இன் 77 ஆம் இலக்க ஜே.ஆர். ஜயவர்த்தன வரலாற்று ஆராய்ச்சி சுவடிக்கூடங்கள் மற்றும் நூலக நிலைய அதிகாரச் சட்டம் | |
| (i) 3 ஆம் பிரிவு | கட்டுப்பாட்டுச் சபையின் பதவிக் காலம் 2009 சனவரி 25 ஆந் திகதி முடிவடைந்த போதிலும் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கத்தவர்கள் திரும்பவும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4(i) ஆம் பிரிவின் (அ)(ஆ) மற்றும் (இ) பந்திகள் | புத்தகங்கள், ஆவணங்கள், கோவைகள், நிழற்படங்கள், திரைப்பட இறுவட்டுக்கள், ஒலி மற்றும் ஒளி நாடாக்கள் ஆகிய பொருட்கள் மற்றும் நூதனசாலை நூலகத்தின் பெறுமதி தொடர்பாக பொது மக்கள், மாணவர்கள், வாசகர்கள் ஆகியோருக்கு தெரியப்படுத்துவதற்காக கண்காட்சிகள் அல்லது கருத்தரங்குகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | பந்தி (எ) | 2010 ஆம் ஆண்டிற்கான கல்வியியலாளர் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவு | 2002 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்காததுடன் நிர்வாக அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | |
| | (i) 5:1:3 ஆம் பிரிவு | கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை |
| | (ii) 6:5:1 ஆம் பிரிவு | நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாதிருந்ததுடன் பெப்ரவரி மாத இறுதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதிக் கணக்குகள் 2011 மார்ச் 29 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| | (iii) 2005 திசெம்பர் 19 ஆந் திகதிய பீஈடீ/33 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | 2010 ஆம் ஆண்டின் போது அரச சார்பற்ற நிதி நிறுவனம் ஒன்றில் ரூபா 47,482,862 முதலீடுசெய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3:4 ஆம் பிரிவு மற்றும் கையேட்டின் | |
| | (i) 2:14:1 ஆம் பந்தி | வேலைகள் மற்றும் சேவைகள் கேள்வி நடைமுறைகளின் மூலம் முடியுமான |

| | | |
|---|---|---|
| | | அளவில் பொதுமக்கள் போட்டிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பாதுகாப்புச் சேவைகள் 2000 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டுவருவதுடன் போட்டிக்கு முன்வைத்து உடன்படிக்கையினைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பாதுகாப்புச் சேவைக்காக 2010 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,342,853 செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) 8:13:4 ஆம் பந்தி | சீன கட்டிடத்திற்காக படிக்கட்டுக்கள் நிர்மாணிக்கும் போது ரூபா 2,874,164 பெறுமதியான மேலதிக வேலைகள் மற்றும் விஸ்தரிப்புக்களுக்காக கொள்வனவுக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) 3:4 ஆம் பந்தி | சந்தை விலை விபரங்கள் கோரப்படாது நிறுவனத்தின் தேவைக்காக ரூபா 172,271 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (உ) | 2009 செப்தெம்பர் 18 ஆந் திகதிய பீஎப்/437 ஆம் இலக்க சுற்றுநிருபம் | காப்புறுதிப் பத்திரமானது தேசிய காப்புறுதி நிதியத்தில் அல்லது வரையறுத்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படவேண்டிய போதிலும் அதற்கு முரணாக நிறுவனத்தின் 3 வாகனங்களுக்காக ரூபா 50,856 செலவு செய்து தனியார் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து காப்புறுதிப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. |

(ஊ) நிதிப் பிரமாணங்கள்

--------------------------------

| | |
|---|---|
| இலக்கம் 756 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை |
| நி.பி 1645(அ) | I. பொது 267 படிவத்தின் பிரகாரம் சம்பவக் குறிப்பு புத்தகமும் பொது 268 படிவத்தின் பிரகாரம் ஓட்டக் குறிப்பும் தனித்தனியாக பேணப்பட்டிருக்கவில்லை.<br>II. ஓட்டக் குறிப்பு பூரணப்படுத்தப்பட்டு அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 02. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

--------------------------------------------------------------

I உதவி நூலகரின் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் முன் அறிவிப்பின்றி சேவையினை இடைநிறுத்தியதிற்கு எதிராக மாவட்ட தொழில் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டிருந்தது. அந்த வழக்கின் பிரகாரம் அவருக்கான இழப்பீடாக ரூபா 237,570 தொகையான ஒரு ஆண்டுச் சம்பளமும் வழக்கிற்கான வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 18,000 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிறுவனத்தினால் ரூபா 255,570 தொகையான சிக்கனமற்ற செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

II நிலையத்தினால் 2002 ஆம் ஆண்டின் போது ரூபா 9,725,000 தொகை முறையான அங்கீகாரமின்றி தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனம் நிதி நெருக்கடிக்கு உள்ளாகியிருந்ததன் காரணமாக முதலீட்டுத் தொகையினையும்

மீளாய்வாண்டு வரையுமான உரிய வட்டி வருமானத்தினையும் அறவீடு செய்தல் ஆபத்திற்கு உள்ளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

III 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு நடைமுறைக் கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ரூபா 3,877,726 மிகைப் பணத்தினை செயற்திறனாக முதலீடு செய்து வட்டி வருமானத்தினை உழைப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

IV சீன கட்டிடத்தின் முதலாவது மாடியில் 4576 சதுர அடியும் இரண்டாவது மாடியில் 4576 சதுர அடியும் ஆண்டின் போது எதுவித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

## 03. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 3,604,119 மிகையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான அதற்கு நேரொத்த மிகை ரூபா 6,658,565 ஆக இருந்ததனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 3,054,446 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டதுடன் நிலையான வைப்புக்களுக்கான வட்டி வீதம் குறைவடைந்திருந்தமை அதற்கான பிரதான காரணமாகக் காணப்பட்டது.

## 04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) முதலீடு

(ஆ) கொள்வனவு நடைமுறை